Registered A. The
G. P. O. Colombo
As A Newspaper.

திராவிடன்

புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

சந்தா விளம்பரம்.

தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு	ரூ. 1-00
தபாற்செலவு உட்பட ,, ,,	ரூ. 1-25
மலாய்நாட்டிற்கு ,, ,,	ரூ. 2-50

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

THE DRAVIDAN.

A Monthly Newspaper.

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

விளம்பர விகிதம்.

1 கலம் முதன்முறை	ரூ. 4 50
¾ ,, ,,	ரூ. 3 00
½ ,, ,,	ரூ. 2 50
¼ ,, ,,	ரூ. 1 50

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ஏற்றதொகை
முற்காசு கட்டவேண்டும்.

புத்தகம்—1. {யாழ்ப்பாணம்.-சுன்னாகம்:-பிரபவஹூ மார்கழிமீ கடுஉ (1927 டிசெம்பர்மீ 30) வெள்ளிக்கிழமை.} இலக்கம்—11.

உ
கடவுள் துணை.

அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்காய்
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம்.

விசேஷ அறிக்கை.

1. திராவிடனுக்குச் சந்தாதாரராகச்சேர விரும்புங் கனவான்கள் முற்பணமனுப்பியேனும் அல்லது வி. பி. மூலமாயேனும் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

2. பணமனுப்புகிறவர்கள் 'பொக்கிஷதார் யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம், சுன்னாகம்' என விலாசமிட்டனுப்பவேண்டும்.

3. உள்ளூர்ச் சந்தாதாரர்களும் மேற்காட்டிய விதமே சந்தாத்தொகையைக் கட்டிப் [illegible] றுக் கொள்ளவும்.

4. கடிதமெழுதுவோர் தங்கள் விலாசத்தைத் தெளிவாய் ஒவ்வொருமுறையுமெழுதவேண்டும்.

திராவிடன் ஆபீஸ்,
சுன்னாகம்.

நாற்றிசை நோக்கு.

:o:

மகாத்மாவும் தீண்டாமையும்.

சைவர்கள் தீண்டாமை அனுசரிப்பதிலுள்ள முரண்பாட்டைப் பற்றிக் காந்தியடிகள் பின்வரும் அழகிய கருத்தைத் தெரிவித்துள்ளார், சைவர்கள் தீண்டாமைபார்ப்பது போன்ற முரணான காரியம் வேறில்லை. சைவர்கள் சிவனை வழிபடுகிறார்கள். சிவபெருமான் சாதாரண சனங்கள் வெறுத்தொதுக்கும் பூதகணங்களுடன் கலந்து பழகுவதில் ஆனந்தங் கொள்பவர். சிவபிரான் தமது சங்கத்தினாலேயே எல்லாரையும் தூய்மைப் படுத்துகிறார். ஆதலின் குறிப்பிட்ட சிலர் தாழ்ந்தவர்களென்றும், அவர்களுடன் கலந்து பழகக் கூடாதென்றும் கருதுதல் பெருந்தவறாகும். —(நவசக்தி)

2 லட்சம் டலர் ஓர் வைரக்கல்

இந்தியாவில் மிகப்பழைய சிவபெருமான் விக்கிரகத்தின் ஓர் கண்ணில் பதிக்கப்பட்டிருந்த தெனக் கருதப்படும் ஓர் வைரக்கல் வாஷிங்டன் துறைமுகத்தில் 2 லட்சம் டலர் மதிக்கப் பட்டிருக்கின்றதாம்.

சுற்றுந் தன்மையுடைய மாளிகை.

பாரிஸ் நகரிலே ஒரு மாளிகை யிருக்கின்றதாம். அது சுற்றுந் தன்மையுள்ளதாம். அதில் வசிப்பவர், சூரிய வெப்பத்தை விரும்பினால் சுவரிலுள்ள ஒரு தெறியை அழுத்த, உடனே சூரிய வெளிச்சமுள்ள பக்கத்துக்குச் சுழன்று நிற்குமாம். அது ஆறு பக்கங்களை யுடையதாம்; ஒரு தோட்டமும் உண்டாம்; கட்டிடத்தின் அடியில் தண்டவாளங்கள் அமைத்துச் சக்கரங்கள் வைத்து மின்சார சக்தியால் இயக்கப்படுகிறதாம். இத்தகைய சுழல் மண்டபம் ஒன்று பண்டைக் காலத்திற் காஞ்சியிலிருந்ததாகக் கந்தபுராணங் கூறுகிறது.

பிரேதப் பெட்டிக்குள் இருந்த ஹியூபர்ட்.

பெர்லினில் ஹியூபர்ட் என்ற சேர்மனியர் கண்ணாடி மூடியிட்ட ஒரு பிரேதப் பெட்டியில் 420 மணிநேரம் (17½) நாள் அடைபட்டிருந்து சென்ற சில தினங்களில் எத்தகைய சுகவீனமு மின்றி வெளியே வந்துவிட்டார். இவர் இந்த வித்தையை இந்தியாவில் ஒரு பக்கிரியிடம் கற்றுக் கொண்டாராம்.

காந்தியும் சைவக் கோயில்களும்.

மகாத்மா காந்தி அவர்கள் சில தினங்களுக்கு முன் பூரி செகநாதத்துக்குப் போயிருந்த பொழுது அங்குள்ள கோயில் தர்மகர்த்தாக்கள் அவரைக் கோயிலுக்கு வரும்படி அழைத்தனர். கோயிலில் தீண்டாதாரை அனுமதிக்க மறுப்பதால் தன்னால் வரமுடியாதென்று மறுத்து விட்டாராம்.

ஆலயவழிபாடு.

கடவுள் ஒருவர் என்னுமுணர்ச்சி மக்களுள்ளத்திற் பிறக்கவொட்டாது திருக்கோயில்களைச் சூழப் பல தெய்வச்சிலைகளை அமைத்து அவற்றுக்கெல்லாம் பொருள்கொடுத்து அர்ச்சனை பூசை முதலியன செய்விக்குமாறு சைவர்களை ஏவிப்பொருள்பறிக்கும் சூழ்ச்சிகளைப் பார்ப்பனர் கட்டிவைப்பாராயினர். ஆலயவழி தெய்வத்திற்குப் பூசைவைப்பித்து ஏனைய தெய்வங்களுக்குச் செய்யியாதொழியின் அத்தெய்வங்கள் சினந்து தீமை விளைவிக்குமெனப் பயந்து தம்பொருளை அவைபொருட்டு விரயமாக்குகின்றனர். இன்னவர்பால் கடவுள் ஒருவர் என்னுமெண்ணம் உதிக்கவழி எது? அர்ச்சனை முதலியவற்றுக்காக் காசு அறவிடுதலை ஒழித்து பூசகர் (பிராமணர்) கடவுளின் இயல்பை விளக்கிச் சற்பிரசங்கங்கள் செய்கின்றனரா; செய்விக்கின்றனரா; ஒருவர் தமது தொழுநோய்தீர்க்குமாறு கடவுளைவேண்டி ஓர் அபிஷேகங் கோயிலிற் செய்விக்குமாறு எனின் அவ்விடத்துக் குருக்கள் மண்டகப்படிச் செலவு பற்றுச் சீட்டு எண்ணெய் பற்று துவாலைப்பழம் பற்று மேளகாரனுக்குக் காசு பற்று அந்தச்சாமான் இல்லை இந்தச்சாமான் இல்லை என்று இவ்வாறு பல கூறிப் பணியாளரைப் பிரமிக்கச்செய்வது மல்லாமல் வீட்டுக்குத் திருப்பும் பொழுது திருநீறு, பிரசாதம் முதலியவற்றை அளித்து, நோய்முதலியன வினையின் பயனென்றும் அதனை ஒழிப்பதற்கு நல்லறங்களை புரிவதுடன் எல்லாம் வல்ல கடவுளை ஓவாது வழுத்தல் வேண்டுமெனவும் இவைபோல்வன தலைமல் அவருள்ளம் பூரிக்குமாறு நல்லாசிகூறி நல்லுபதேசமொழிகளைச் செப்பி மகிழ்விக்கின்றனரா? பொருளே பொருள் என்ற காசசலும் குழப்பமுமே! தான் தான் இறைவனை நோக்கி வழிபடுவதே சிறந்தது. பொருள்கொடுத்துப் பிறர் மூலமாக வழிபாடு செய்வித்தல் (இப்பொழுது பூசகர் மூலமாகக் கடவுளை வழிபடும் முறை) ஆற்றப்பசித்தானொருவன் தன்பசி தணித்தற் பொருட்டுப் பிறனொருவனை உண்பித்தது போன்றதாகும். வருணாச்சிரமம் நமது நாட்டுக்கும் சமயத்துக்கும் மிகவுங் கேடுபயப்பன. நமது ஆலயங்களில் வழிபடுகின்றவர்களும் பூசகராயுள்ள பிராமணர்களும் ஆகிய இருபகுதியினரும் தமிழர். இருபகுதியாரும் வீட்டுப் பாஷையும் நாட்டுப்பாஷையும் சொந்தப்பாஷையும் தமிழ்; தமிழ்மக்களாகிய பார்ப்பனர் தமக்கும் பிறர்க்கும் எளிதிற் பொருள் விளங்கக்கூடியதாகிய இனிய தமிழ் வேதங்களை ஓதிக் கடவுட்பூசை இயற்றுதலை ஒழித்து கேட்போர்க்குந் தமக்கும் பெரும்பாலும் பொருள்விளங்காத சமஸ்கிருத சொற்றொடர்களை உச்சரித்து வருகின்றனர் சொற்களின் பயன் எண்ணங்களைத் தோற்றுவித்தல் விளங்காத சொற்களைச் சொன்னால் கேட்போருள்ளத்தில் ஒருவகையான எண்ணங்களும் எழமாட்டா ஆதலின் பொருள்விளங்காத பிறமொழிச் சொற்றொடர்களை உச்சரித்துவருதல் பயனற்ற செயலாகும். ஒவ்வொருவரும் தத்தமக்குரிய மொழியிலேயே இறைவனைத் துதித்து வழிபடுதல் வேண்டும். தமிழை ஒழித்துச் சமஸ்கிருத சுலோகங்களை ஓதிக் கடவுட்பூசை ஆற்றுதல் பயனற்ற வீண்செயலென்பதை ஓர்ந்து நம்மவர் அதனை ஒழித்துவிடுதல் வேண்டும். ஆலயங்களில் செய்யப்படும் பூசை பரார்த்தபூசை எனப்படும். பிறர்பொருட்டு-(வழிபடுவோர்பொருட்டு) செய்யப்படும்பூசை என்பது அதன்கருத்து. ஆகவே வழிபடுவோருக்குப் பயனில்லவாகியவற்றை ஆலயங்களில் இயற்றுதல் பெருங் குற்றமாகும் பார்ப்பனர் வேண்டுமாயின் தமது ஆன்மார்த்தபூசையைச் சமஸ்கிருதமோதிச் செய்துவரலாம். சமஸ்கிருதம் ஆலயங்களில் ஓதுதல் வேண்டற்பாலதல்ல தமது சிவனார்த்தமாக ஆலயங்களில் பரார்த்த பூசை செய்துவரும் பார்ப்பனர் வழிபடுவோரின் எண்ணத்துக்கு மாறாக நடத்தல் எப்படி முடியும். எல்லோரும் ஒருமித்து நமக்கு தமிழ் ஓதிப் பூசை இயற்றலே வேண்டற்பாலது எனக்கூறின் அதனை மறுக்கும் ஆற்றல் அவர்களிடத்திலில்லை.

திருவருள் நாட்டமிக விளக்கமுறுகின்ற கதிர்காமத்தில் எவ்வகையாக எவர் என்ன ஓதிப் பூசை இயற்றுகின்றார் என்பதனை விசாரிப்போமாயின், ஆலயங்கள் சமஸ்கிருதத்திலும் பிராமணரிலும் தங்கி இருக்கவில்லை யென்பது வெளிச்சமாகப் புலப்படும், பார்ப்பனரல்லாதார் பிறரும் ஆசாரமுடையவர்களாய்த் திருக்கோயில்களில் பூசைசெய்து வருதல் குற்றமாகாது. அர்த்தமற்ற கிரியைகளினால் பயன் யாதுமில்லை. பத்திவிளைக்கக் கூடியனவும் அர்த்தம் புலப்படுவனவுமாகிய கிரியைகளையுமே ஆலயங்களிலும் பிறவிடத்தும் கையாண்டு வருதல் வேண்டும். புக்கை பொங்குதல் பலகாரம்செய்தல் சருவம் மினுக்குதல் முதலியவற்றில் தேர்ச்சி அடைந்திருத்தல் பூசகரின் திறமையாகமாட்டாது.

"[illegible] இறைச்சி யறுத்திட்டுப்
அன்போடுருகி அகங்குழைவார்க்கன்றி
பொன்மணியை எய்தவொண்ணாதே" (திருமந்திரம்)

தவிலடியும் செடிலாட்டும் சின்னமேளமும் வாணவிளையாட்டும் மோட்சம்போக்காட்டும் சாதனங்களாகுமா. கோயில்கள் ஒருவர் இருவர் பொறுப்பில் இருப்பதினால் அவற்றில் வருகின்ற வரும்படியை அவர்கள் தம்மனம்போல அனுபவித்து வருகின்றனர்.

கோயில் வரும்படிக்குக் கணக்குவழக்குக் கிடையாது அது முதலாளிமார் உடைமையாகவே இருந்துவருகின்றது; சில சமயங்களில் பங்குபாதகங்களால் வழக்குகள் ஏற்பட்டுப் பெருந்தொகையான பொருள் கோட்டுக்குச் செலவாகின்றது; கோயில்கள் ஊரார் உடைமையாக இருந்து சபைகளின்பொறுப்பில் நடத்தப்படாவிட்டால் அவை நன்னிலை அடைவதற்கு வழியில்லாமல் போய்விடும். பொதுச்சனங்கள் கோயிலுக்கென்று உதவும் பணங்களையெல்லாம் முதலாளிச் சாமிமார் பசியாறிக்கொண்டே வருவார்கள். இக்காலம் கோயில்களே சைவசமயத்தைக் கெடுத்து வருகின்றனவென்றால் குற்றமாகாது. கோயில்களின் தற்காலநிலைமையைக் குறித்து ஓர் அறிஞர் பின்வருமாறு கூறுகின்றனர் "பணிக்குநிலைக்களமான ஆலயங்கள், சோம்பேறிகள், வேசையர்கள், சோற்றுட்கள் முதலிய தீயவர்கள் உலாவுங் குகைகளாக மாறியிருக்கின்றன. ஆலயங்களில் பணிசெய்வோர் கூலிக்காரராகவும், வயிற்றுச்சாமிகளாகவும் மாறியிருக்கிறார். ஆலய அர்ச்சகர் உள்ளத்தை பணமும் பிரசாதமும் பிறபேய்களுங் குடிகொண்டிருக்கின்றன. ஆலய அர்ச்சகர்க்கும் கல்விக்குமிடையில் பொருள்மலையும் சோற்றுக்கடலும் நின்றுகொண்டிருக்கின்றன. அவர்கள் தாம் பூசை செய்வன கல் செம்புதானே என்று எண்ணிப் பல திறபாவங்களையுஞ் செய்கின்றார்கள் ஆலய அர்ச்சகர்நிலை இவ்வாறாயின் ஏனையோர் நிலையைக் கூறவும் வேண்டுமோ?"

மக்கட்பிறப்பின் உயர்வும் ஏதுவும்.

பூவுலகத்திலேயுள்ள தோற்றங்களெல்லாம சரம், அசரம் என்னும் இருவகையிலடங்கும். தம்மில் இயங்குமியல்பின வெல்லாம் சரமெனப்படும். தம்மில் இயங்காவியல்பின வெல்லாம், அசரமெனப்படும். கீட முதல் மக்களீறாகவுள்ள சீவராசிகளெல்லாம் சரமாம். புல், பூண்டு, விருக்ஷங்கள், மண், கல், உலோக முதலாகவுள்ள மற்றையன வெல்லாம் அசரமாம். அசரம் என்னுஞ் சொல்லிலேயுள்ள அகரம் சரமல்லாதது என எதிர்மறைப் பொருளில் வந்தது. கீட முதலிய ஊர்வனவற்றுட் பாம்பு சிறந்தது. மீன் முதலிய நீர்வாழ்வனவற்றுள்ளே திமிங்கிலம் சிறந்தது. பறவைகளுள்ளே மயில் சிறந்தது. விலங்குகளுள்ளே குரங்கு சிறந்தது. மக்கள் இச்சரவகைகள் எல்லாவற்றினும் சிறந்தவர்கள். யானை, சிங்க முதலியன சிறந்தனவாகவோ? அவற்றினும் மனுஷர்கள் சரீரபல முடையவர்களோ? பசிதாகம், துன்பம், இன்பம், மூப்பு, இளமை, நோய், சாவு முதலியன அவைகளுக்கும், மக்களாகிய நமக்கும் பொதுவல்லவா? அங்ஙனமாகவும், அவைகளிலும் நாமுயர்ந்துளோம் என்பதெங்ஙனம் என்றாலோ, பசிதாக முதலின பொதுவென்ப தன்மையே அதுகொண்டு அவை நமக்குச் சமமாகா. பசிதாகங்களுக்குதவும் வண்ணம் நாம் பயிரிடல், கிணறு குளம் தோண்டல் முதலியவற்றைச் செய்யுமாற்றலுடையேம். வாசஸ்தானங்களையும், அலங்கார கோபுரங்களையும் உன்னத அரண்களையும் அமைக்கின்றோம். வெறும் வெளிகளை விசித்திர நகரமாக்குகின்றோம். கடலைக் கப்பல் செய்து அது கொண்டு தாண்டுகின்றோம். இரும்பை வெள்ளியாக்குகின்றோம். வெள்ளியைப் பொன்னாக்குகின்றோம்.

கடவுளொருவரெனத் துணிந்து அவர்க்காலயம் வகுத்து அவரை அங்குச்சென்று வழிபடுகின்றோம். உலகம் பொய்யெனக் கண்டு துறவு பூண்டு ஞான யோகிகளாய்த் திரிகின்றோம். இவை முதலிய எண்ணருங் கருமங்களும், வித்தைகளும் எம்மிடத்துண்டு. இவற்றுளொன்றையேனும் மிருகங்களுக்கில்லையே. [illegible]றியே அவை அவற்றைச் செய்ய வியலாவாயின வென்றாலோ, கைகால்களையுடைய குரங்குகள் செய்யக் காண்கிலம். ஆதலின் மக்களே உயர்ந்தோராவார்கள். மக்கட்பிறப்பிற் குயர்ச்சி கரசரணாதி அவயவங்களினது அமைவால் மாத்திரமன்று. உயர்வாகிய அறிவினாலுமேயாம். மிருகங்கள் புண்ணிய பாவங்களைப் பகுத்தறியா. நாமோ அவற்றை நன்றாக அறியும் வன்மையுடையோம். மக்களுள்ளும் இது புண்ணியம் இது பாவம் என்று நோக்காது நேர்ந்தபடி யொழுகுவோருளர். அதனால் அவர்க்குப் பகுத்தறிவில்லையெனக் கொள்ளலாகாது. அவர் அவற்றைப் பகுத்தறிய முயலாதொழுகுபவர்களேயாவர். ஏனைத் தோற்றங்களுக்கெல்லாம் மக்களைச் சிறந்தவர்களாக்கி, மேனிலையிலே வைத்தது அறிவொன்றுமேயாம். அவ்வறிவோ மக்களுடைய இருதய கமலத்தினுள்ளே யிருந்து சொலிப்பதாகிய நந்தாவிளக்கு அஃதொரு காலத்தும் அவியாவியல்பினது, அது வளர்க்குந்தோறும், வடவிருக்ஷம் போல ஓங்கி வளரும். வளர்க்காது விட்ட விடத்து மங்குவதன்றி அவிவதில்லை. அறிவினை வளர்த்துக் கொண்டவர்களே மக்களுள்ளுஞ் சிறந்தோராவார்கள். ஆதலால் உயிர்த்தோற்றங்களுள்ளே சிறந்த மக்கட் பிறப்பினைப் பெற்ற நாம் அம்மக்கட் பிறப்பினுஞ் சிறந்தோரென மதிக்கப் படுதற் கேதுவாகிய அறிவினை வளர்த்தல் நமக்கெல்லாம் இன்றியமையாக் கடனாம்.

அறிவு உலோகப் பொருளிலும், விருக்ஷாதியிடத்தும், மிருகங்களிடையும், மக்கண் மாட்டும் உளவே யாயினும், உலோகப் பொருளிலேயுள்ள அறிவு, மூர்ச்சையாகிக் கிடப்போரினத்துள்ள அறிவு போலவும், விருக்ஷாதியிடத்துள்ள அறிவு ஆழ்ந்த நித்திரை செய்வோரிடத்துள்ள அறிவு போலவும், மிருகங்களிடையேயுள்ள அறிவு, சொப்பன வஸ்தையினுள்ளார் அறிவு போலவும் படியேற்றமாகவிருக்கும் இங்ஙனந் தோற்றங்கள் தோறும் பேதகிலைப்பட்டிருக்கும் அறிவு சித்தெனப்படும். இதனையன்றோ நம் தாய் நாடாகிய இந்தியாவின் கண்ணுள்ள, முப்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

திராவிடன்.

சன்னம்:— 1927,
மார்கழி௴ 15௳ வெள்ளிக்கிழமை.

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க, முன்னின்றுபின்னோக்காச்சொல். குறள்.

நீயேன் உன்னைத் தாழ்த்துகின்றாய்?

திராவக மருந்து குடித்தவன் பான்மையாக எம் சகோதரர்கள், தாழ்த்தப்பட்ட சாதியினர் நாமென்னுங் கொள்கையுடன் தாழ்த்தப்பட்டவன் என்னுங் கையெழுத்துடன் இத்திராவிடனில் தோற்றிய கடிதங்களைப் பன்முறையும் நாம் பார்த்திருக்கிறோம். தன்மூக்குப்போனாலும்சகுனப்பிழையாகட்டுமென்பதுபோலவே, இவர்களுந் தங்களைத் தாங்களே ஒரு காரணமுமின்றித் தாழ்த்திக் காட்டுவது யாது நன்மை கருதியோ என்பதை அறிய ஆவலுடன் ஆசிக்கின்றேன். நிற்க,

யார்க்கும் பொதுவென நம்தேசத்தைப் பரிபாலித்து வரும் ஆங்கில அரசின் பிரஜைகளாக இருக்கும் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்னுமொரு கொள்கையை நாமுட் பரப்பி சர்வசனங்களினிடையே பிரிவை யேற்படுத்தி மக்களின் சமத்துவத்தைக் குறைத்துக் குழந்தைகளின் மனங்களிலும் இப்பெரும் பாரமான கல்லைக்கட்டித் தாழ்த்திக்கொண்டேவரும் சகோதரர்களே! உங்கள் மனங்களினின்று எழும் இச்செயலானவாக்கியத்தை அகற்றிவிடுவதே மேல்நோக்கம்

செல்வம் பொருந்திய தன் சகோதரனைப் பார்த்து வறுமையடைந்த சகோதரன் பொறுமை கொள்ளும் நிலையில் நீங்களிருக்கின்றீர்கள் இதனால் ஆவதென்னவென்பதைச் சிந்திக்கவேண்டும். நாமும் செல்வத்தின் அணுக்களையாவது பங்குபற்றுவதற்குரிய முயற்சியைத் தேடவேண்டும். பொறுமை கொண்ட சகோதரன் நிலையிலிருப்பது வியர்த்தமாகமுடியும். கீழ்சாதி மேல்சாதி யென்னும் நூதன கொள்கைகளை நீங்களே ஸ்தாபித்து மேலோரையவமதித்துக் கீழ் என்றும் மேல் என்றும் வருவதற்காய்த் தேண்டிக்கின்றீர்களென்று சுதேச ஒற்றுமையைப் பிளவுபடுத்தாது உங்களுக்கு வேண்டும் முக்கிய விஷயத்தைக் கவனிக்கில் கல்வியென்னும் விஷயத்தையே முதலாக எடுக்கவேண்டும். பிள்ளைகள் கல்வி படிக்கற்பதற்கிருக்கும் குறைமுறைகளைக் கூறுமிடத்து, நம்மிடத்துக் குடிகொண்டிருக்கும் வறுமையே முதற்காரணமெனச் சொல்லுதல் மிகையாகாது. ஏனெனில் பாருங்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஊழியஞ் செய்யும் சங்கமென இருசங்கங்களேற்படுத்தினீர்கள் சங்கங்கள்மூலமாக எத்தனை பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பினீர்கள். இனியாகுதல் பிள்ளைகளைச்சேர்த்து அனுப்புவதற்கு ஆயத்தமாகவேனும் இருக்கின்றீர்களா இல்லையே? பின் நீங்கள் சொல்வது இங்கிலீஷ்பள்ளிக்கூடங்களில் எங்கள் பிள்ளைகளைச் சேர்த்துப் படிப்பியுங்களாம் என மாத்திரம் சொல்வதற்கு ஆயத்தமாகவிருக்கின்றீர்கள்.

பாருங்கள் ஒரே குடும்பங்களில் வசிக்கும் பந்துக்களில் தானும் உயர்வுதாழ்வு கற்பிப்பதும் புருஷனைக்காட்டிலுஞ் சிலகுடும்பங்களில்பெண்டிர்கள் சாத்யேறமாக இருக்குமிக்காலத்தில் உயர்வு தாழ்வு எனச்சொல்லி ஓலமிட்டெழுதும் நண்பர்கள் சற்றே பொறுமையுடன் நம் சோட்டியினரின் உட்பிரிவுகளை முற்றகளைதலும், மற்றையவர்களுடன் சர்வசனசம்மதத்துடன் அன்புபூண்டொழுகலுமே நம் முக்கிய கடமைகளிலொன்றெனமதித்து நடப்பதே உங்கள் புத்தியின் பாற்படத்தக்கது.

வருவாய்க்கேற்பக் கடன்படல்

பலர் கல்யாணம் முதலிய விசேஷங்களில் மதிமயங்கித் தமக்கு வருமானம் எவ்வளவோ அதற்குப் பதினமடங்காகக் கடன்பட்டாகிலும் செலவுசெய்துவிட்டுப் பின்பு கொடுக்க வகையறியாது விழித்துத் திண்டாடுகின்றனர். கடன் பட்டவன் தான் வாங்கிய கடனை கடன் தந்தவனுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டியதற்குக் காலதாமதஞ் செய்வதைக் குறித்துப் பல சாக்குப் போக்குகள் சிருஷ்டிக்க ஆரம்பிக்கின்றான் எவனுக்குக் கடன் கொடுக்க வழியில்லையோ அவனை எல்லோரும் ஓர் கள்ளனை எப்பாடுபடுத்துவரோ அப்பாடு படுத்திவிடுவார்கள்.

இது இவ்விதமிருக்க, வாங்கின கடனைத் தீராதவன் எவனோ அவன் கொடிய இரணபாதகன் ஆகிறானாதலால், கடன்கொண்டவன் மறுமையிலும் இறைவனது கோபத்துக்குப் பாத்திரனாகி என்றும் மீளா நரகத்தில் வீழ்ந்து வருகின்றான் என்று நமது சமயசாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஆகையால் நாம் எக்காரணத்தைக் குறித்தும் கடன்படலாகாது. அதைவிட இழிவானது வேறெதுவுமில்லை கடன்வாங்குவது நாசகாரியம் அதுவே பெருந்துயரங்களுக்குங்காரணமாகின்றது. ஆனதால் நாம் எவனிடத்தும் கடன்படாமலிருப்பதையே நமது முக்கியநோக்கமாக வைத்துக்கொள்ளவேண்டும். பெரிய வியாபாரிகளிதனை யேற்பதற்கு முடியாது கடனெடுப்பதும் கடன் கொடுப்பதுமே வியாபாரம்; கடன்படாது வியாபாரம் செய்வதும் உண்டு; இருந்தும் நம்மிடத்தேயுள்ள பொருள் எவ்வளவு சொற்பமாயிருப்பினும் அதைக்கொண்டே சிக்கனமாகச் செலவுசெய்து சுகமாயிருக்க வழிதேட வேண்டும்.

ஆன்மசாத்தின்பொருட்டாவது அறத்தின்பொருட்டாவது யாவருந் தத்தம் வரவுக்கேற்ப, மட்டாகச் செலவு செய்தல் வேண்டும். வரவுக்கு மேலாக செலவு செய்யப் புகுவோர் கடன்படத் தலைப்பட்டுப் பெருந் துன்பங்களையும் அவமானங்களையும் அடைகின்றனர். ஒருவனுக்கு காலக்கிரகமெப்படியோ அவ்விதமேதான் கடனும் ஆகின்றது. கடனுடையவர்க்கு இம்மை மறுமை இரண்டினும் இன்பமேயிலை, எக்காலத்தும் தம்மிடத்தேயுள்ள கைப்பொருளைக்கொண்டு சீவிப்பதே மிகவும் உத்தமமாகும். "குறைகுடம் கூத்தாடும்'' என்னும் வாக்கியத்திற்கேற்ப கைப்பொருளின்றிக் கடன்பட்டு வாழ்பவனும் போக்கியனுகான். எத்தனைப் பெருஞ் செல்வத்தனயினும் கடன்படத் தலைப்படுவோர் விரைவிலே தங்களது செல்வமெல்லா மிழந்து தரித்திரராவார். இம்மையிலே மனிதர்கள் அனுபவிக்குந் துன்பங்கள் எல்லாவற்றினும் கடனால் உண்டாகுந் துன்பத்தின் மிக்க துன்பம் யாதொன்று மிகலை கடன் பட்டவன் யதார்த்தவாதியாயிருப்பது மிகவும் துர்லபமே எவன் கடனாளியாக ஆகின்றானோ அவன் மனதானது எக்காலத்தும் கலங்கினவண்ணமாகவே இருக்கும். கடன்படல் எல்லாப் பாவங்களையும் வலிந்து கைப்பிடித்தழைக்குந் தூது. கடன் கொ [illegible]

நம்முடைய தேசத்தாருள்ளே கடன்படும் வழக்கம் மிகப்பெரிது. கடன்படாதவர் நூற்றுக்கு ஒருவர் பாக்கி கிடைப்பது மிக அரிது. ஏனெனில் உலகில் உலகத்தாரைப்போல் நாம் நல்ல ஸ்திதியில் இருக்கவேண்டுமானல் 'பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை'' என்னும் முதுமொழிக் கேற்ப எல்லாம் பணத்தைப் பொறுத்ததாகவே யிருக்கின்றது ஆனது பற்றி நாம் "பொருள்தனைப் போற்றி வாழ்'' என்னும் முதுமொழிப்படி நம் வரவுக்கேற்ப மட்டாகச் செலவு செய்து இம்மை மறுமைப் பயன்களை யடைய வழி தேடல் வேண்டும். (வரும்)

கற்பெனப்படுவது. பெண்களுக்குரியன.

உலகசீவிய இல்லறம் நடாத்தி நற்கதியடையவேண்டுமென அபேக்ஷிக்கும் ஒரு மனிதன் முதன்முதலாக அவனும் அவனுடைய மனைக்கிழத்தியும் சாத்விக ஒற்றுமையுடன் சகல சீவாத்மாக்களிடத்தும் அன்புவைத்தல்வேண்டும். சீவாத்மாக்களிடத்தில் அன்பிருப்பின் கடவுளிடம் பேரன்பு உதித்தற்கொப்பும். இன்னும் அறம் தங்களாலியன்றமட்டும் செய்ய வேண்டும். கணவன், அறிவுடையோர்களாயுள்ள பெரியோர்களைப் பேணல் முதலிய நல்லொழுக்க மனைத்தையுங் கையாண்டு வரவேண்டும் அன்புடைய மனத்துடன் இல்லறம் நடாத்தும் பெரியோருடைய கணவி எவ்வித மொழுகவேண்டுமெனின், கற்புநிலை தவறாது ஒழுக்கம், நாணம், நீதிநிலை, அன்புநிலை தவறாது இவ்வுலகி லெல்லோர்க்கும் நல்லவளென்னும்படி பெயர் புனைந்து, எல்லோரும் புகழும்படி சற்புத்ரசியாயும், இல்லறதேவியாயும் வாழல்வேண்டும். இந்நிலைகளினின்றும் அவள் திறம்புவாளேயாயின் அவளுக்கு நல்ல கதி யில்லையெனப் பன்னூலும் கூறுகின்றன. இன்னும் அவள் இழிவான நாய் கழுகு பன்றி முதலிய அநேக பிறவிகளுற்று துன்புற்று நசிந்துகொண்டே வருவளென நீதிநூற்கள் எடுத்துரைக்கின்றன

ஆகையால் கற்புநிலை தவறாத கன்னிகை தான் இல்லறதர்மத்துக் குரியவள்; (கற்புநிலை தவறினவள்) இல்லறதர்மத்துக் குரியவளாவளென்பது சாதம் கற்புநிலையுடைய பெண்ணொருத்தியாலேயே தர்மம் நிலைக்கப்படுவதாம். இவர்கள்தான் தங்கள் கணவரை முதற்றெய்வமென நம்புவோர்; கணவனின் சொற்படி கட்டளை மீறுதோரும் இவரேயாவர்.

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங்கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறு மாறாக நடப்பாளே யாமாயிற்
கூறாமற் சந்நியாசங் கொள்'',

என்றார் ஔவையார் ஆதலான் இல்லறத்திற் குரியவள் கணவியே எனக் கொள்ள வேண்டும் கணவன் மனைவி இருபேரும் ஒற்றுமையுடைய மனத்துடன் இல்லற பாத்திரத்திலிருந்து வாழ்ந்து தானங்களிற் சிறந்த அன்னதானமே சிறப்புடனிரங்கவேண்டும் அன்றோ? நிற்க,

ஒருக்கால் கைலையங்கிரியிலே சிவபெருமான் தம்மை முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் மகரிஷிகளும் மற்றெல்லோரும் வணங்கி நின்று போற்றும்படி பெருங்கருணைத் தடங்கடலாகிய எம்பிரான் திருவோலக்கமாக எழுந்தருளியிருக்குஞ்சமையம், பார்வதியானவள் எழுந்து கரம் கூப்பி வணங்கி நின்று சுவாமி! சொர்க்க மத்திய பாதாலமென்னும் ஈரேழுலகினும் இல்லறம் வழுவாது நடத்தி நற்கதி யடைந்தவர் எவரேனு முண்டோவென வினவ, எல்லாம் வல்ல இறைவனாகிய பரமன் கூறுகின்றார்: பார்வதி! தேவலோகத்திலே, வசிஷ்டன், அகஸ்தியன், அயன், புயங்கன், சம்புவென்னும் ஐவருண்டு பூலோகத்திலே திருவள்ளுவ ரொருவருண்டு. இவர்கள் தென்புலத்தார் கடன, தேவர் கடன், விருந்தோம்பல், சுற்றந் தழுவல், பூசை செய்தல் முதலியவற்றை விதிப்படி செய்து கற்பில்நின்றும் வழுவாத மனையோடே ஒருமித்து வாழ்ந்து நற்கதி யடைந்தாரெனக் கூற, மீண்டும் உமாதேவியானவள் வணங்கி, அந்த அறுவரின் திவ்விய சரிதைகளைத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென இரங்கினள். பெருமான் ஐவர் சரிதங்களையும் திருவள்ளுவநாயனர் சரிதையையுங் கூறித் தேவியாரை மகிழவைத்தனர்.

அறிவுடைமைக்கே நீதி வழிகாட்டி.

(வள்ளுவவிகடன் எழுதுகிறன்.)

நீதியென்னும் வாக்கியத்தைப் பரியார். நீதியென்பது எழுத்திரண்டில் அடங்குகின்றது. விரித்தெழுதுவதற்குத் திராவிடன் இடந்தரான் சுருக்கிப் பார்க்கும்பொழுது சமைய சாத்திரத் தொடமைந்த வழி யென்பதை சைவத் திருமுறையே துலக்கி நிற்கின்றது. உதாரணமாக பழைய சரிதைகளைக் கூற முடியும் வெறும் புகழ்ச்சியையே விரிக்கும் நீதியைப் பரிபாலிப்பது அறிவுடையோர் கடமைகளிலொன்றும், அறிவுடையோரென மதிக்கும் பெரியோரிடத்தே சாத்திரம் கனதி மதிப்பு செல்வம் இவைகள் ஒருங்கே அமையப் பெறின் நீதி யென்பதைக் காற்றிலே விடவேண்டும். அறிவில்லா ஏழை ஒருவன் தற்செயலாக இவரிடத்து நீதி பெறுவதற்கு காத்திருப்பது, இலகமரத்துக் கிளியொப்பாக முடிகிறது. இன்னும் காலத்துக் கேற்ற அரசாங்க உத்தியோககௌரவமும் அடையப்பெறின் ஏழைச் சனங்களும் நம் நாட்டில் இருந்து சீவிக்கின்றார்களே, இவர்களும் மக்கள் பிறப்பில் ஒன்றுதானே. ஏழைகளாகவே சீவிக்கும்படி கடவுள் உண்டாக்கி விட்டாரா. எங்களின் அந்தஸ்துக் குரிய நீதியை எவர்க்காயினும் நாம் இரங்க வேண்டுமே, என்பனபோன்ற கொள்கைகளைக் கையாடி வருவரேல் காலத்துக் கேற்ற கௌரவமும் தேடி-தானேவரும்.

ஸ்ரீ சாரதாதேவியின் அம்சமாகிய ஔவைப்பிராட்டியாரின் அற்புத சரிதை.

வண்ணைநகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
அவர்கள் எழுதியது.

(முற்றொடர்)

அதன்பின்னர் 'உக்கிரப்பெருவழுதி' என்னும் அரசன் ஔவைப்பிராட்டியாரை விளித்து அம்மணி! உலகத்தில் பயனற்ற செயல்கள் எவை எவை யென வினவ, வரகவியாகிய ஔவைப்பிராட்டியார் மந்தகாசஞ்செய்து, திரவியப்படையாதவனது குடிவாழ்க்கையும், புத்தியில்லாதவனது வியாபாரமும், நல்லதேசமில்லாத வேந்தன் செங்கோலோச்சுவதும், உள்ளன்பு நிறைந்த குருவில்லாத கல்வியும், நற்குண நற்செய்கையற்ற மனைவியும், விருந்தில்லாத வீடும் விழலாகும் என்னுங் கருத்தை யமைத்து,

"மாடிலான் வாழ்வு மதியிலான் வாணிபம்
நாடிலான் செங்கோ னடாத்தலுங் கூடுங்
குருவிலா வித்தை குணமிலாப் பெண்டீர்
விருந்தில்லா வீடும் விழல்.''

என்னும் வெண்பாவைப் பாடியருளினர். அது கேட்ட அரசர்பிரான் அகமலர்ந்து, அன்னாய்! நால்வருணத்தவர்களில் அமைச்சர்றொழிற் பரிக்கு வல்லார் யாரென உசாவ, ஔவையார் களிப்பெய்தி, உபவீதத்தைத்தரித்த பிராமணர் மந்திரியானாலோ செங்கோல் பிறழும்; நம்மவராகிய க்ஷத்திரியராயின் கொடிய பூசல் விளையும்; நிறைகோலாகிய தராசையுடைய வணிகனென்றாலோ குடிகளின் செல்வவிருத்தி யழியும்; நான்காம் வருணத்தனாகிய வேளாளனெனிலோ, அமைச்சனாக வதிதற்கு முரியனுவான்; பிரயாண வழிகளில் உயிர்க்குயிராய மெய்காப்பாளனுமாவான்; அத்தகைமை வாய்ந்த மந்திரியை வகித்த மன்னனே நீதி கோடாத அரசன் என்னுங் கருத்தையடக்கிய,

"நூலெனிலோ கோல்சாயு நுந்தமரேல்
வெஞ்சமராம், கோலெனிலோ வாங்கே குடி
சாயு—நாலெனிலோ, மந்திரியு மாவான் வழிக்
குத் துணையாவான், அந்த வரசே அரசு.''

என்னும் வெண்பாவைப் பாடியருளினர்.

அதைக்கேட்ட சேனாபதி வழித்தோன்றலாகிய நிருபன், அம்மணி! இவ்வுலகில் எதனினும் எது நன்று என்று வினவ, ஔவையார் அகமலர்ந்து, யாசகத்துக்கு வந்தவரை வைது பின்பு பிச்சையிடுவதிலும் இடாதிருப்பதே நன்மையாகும்; நாயகனுடைய பேச்சுக்கு அடங்கி நடவாது எதிர்மாற்றம் இயம்பும் மனையாளோடு கூடி வாழ்தலினும் பேயோடு கூடி வாழ்தல் நன்மையாகும்; உள்ளன்பில்லாத சிநேகத்திலும் வலிய விரோதமே நன்மையாகும்; செல்வமில்லாது தரித்திரனாயிருப்பதினும் இறப்பதே நன்மையாகும் என்னுங் கருத்தையடக்கி,

"ஏசி யிடலி லிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய் நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்விலாச்
சங்கடத்திற் சாவதே நன்று

என்னும் வெண்பாவைப் பாடியருளினர்.

அதைச் செவிசாத்திய நிருபன் உவகைவாரிதியமிழ்ந்தி எந்த எந்த நாடு எவ்வெச் சிறந்த பொருள்களையுடையது என்று கேட்க, ஔவையார் மகிழ்சிறந்து, சேரநாடானது உன்னத யானைகளையுடையது; மேன்மை தங்கிய சோழநாடானது சோற்றுப்பெருக்கத்தை யுடையது; பாண்டியராசர்களால் ஆளப்படும் பாண்டிநாடானது உயர்ந்த முத்துக்களையுடையது; தெளிந்த நீரையுடைய கழனி சூழ்ந்த தொண்டமண்டலமானது பெரியோரையுடையது, என்னுங் கருத்தையமைத்து,

"வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
றென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்
றொண்ட, நன்னாடு சான்றோ ருடைத்து.''

என்னும் வெண்பாவைப் பாடியருளினர்.

அதனையுணர்ந்த [illegible] ருடைய பொருள் எத்தகைய செயல்களால அழியுமென்று உசாவ, ஔவையார் ஆன்மநாயகரான சிவபெருமானது அடியாருக்கு உதவாத திரவியமானது, குனியஞ் செய்யும் எத்தருக்கும், பேய்க்குப் பலியிடல் முதலிய ஆராதனைக்கும், வேசிமகளிருக்கும், உபயோகமற்ற கெட்ட செயல்களுக்கும், திருடர் கொள்ளையிடுதற்கும், அறிவை மயக்குங் கள்ளுண்டற்கும், அரசனுலிடப்படும் அபராதத்திற்கும், துன்மரணங்களுக்கும் ஆசைவார்த்தை பேசி அணுப்பும் எத்தருக்கும் உரியதா யழிவெய்தும, என்னுங் கருத்தமைத்து,

"நம்ப னடியார்க்கு நல்காத் திரவியங்கள்,பம்
புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்
காங், கொள்ளைக்காங்கள்ளுக்காங் கோவுக்காஞ்
சாவுக்காங், கள்ளர்க்காந் தீக்காகுங் காண்.''

என்னும் வெண்பாவைப் பாடியருளினர்.

இங்ஙனமே அரசன் பொறித்த அளவற்ற ஆசங்கைகட்கெல்லாம் சிறிதும் ஆலசியமின்றி உத்தரவளிப்பதைக் கண்ட வேந்தன், இவர் கலைமகளின் கடாட்சம்பெற்றவரென உன்னி, குணிப்பற்ற தமனியக் குவைகளையும், ஆபரணங்களையும், பீதாம்பரங்களையும் பரிசாக அளித்துப் பிரியாவிடை கூறியனுப்பினன்.

அதன்பின்னர் ஔவைப்பிராட்டியார் தமது இல்லத்திற் போந்து வேந்தனீந்த வெறுக்கைகளனைத்தையும் அன்னை-தந்தையருக்கு வழங்கி அவர்களோடு வதியுங்காலத்து, மங்கைப்பருவமடைந்தமையால், புத்திரி புஷ்பவதி ஆனமையை இருமுதுகுரவருமுணர்ந்து, மகளை விளித்து அம்மணி! இனிநீர் உமது மனதுக்கிசைந்த ஓர் வரனை வேட்டு இல்வாழ்க்கையைக்கைக்கொண்டொழுகுவதே மரபாமெனப் பணித்தனர். அம்மாற்றத்தைச் செவியுற்ற ஔவையார் அன்னைகைகூப்பிவணங்கி ஐயன்மீர்! அடியேன் குடும்பசாகரத்தில் மூழ்குவதற்கு எஞ்ஞான்றும் ஒருப்படேன்; துறவுபூண்டு தவமுஞற்ற அவாவுற்றேன்; ஆதலால் தமியேனது அபிப்பிராயத்தை நிராகரிக்காது உத்தரவளிக்குதிர், துறவறத்தையே எனதுள்ளம் அனவரதமும் நாடுகின்றது என்று நவின்றனர் அதைக் கேட்ட தந்தை தாயிருவருஞ் சிந்தையலமந்து, கண்மணி, நின்னுள்ளக்கருத்து இதுவாயின், அந்நெறியின்கண்ணே ஒழுகுதியென உத்தரவளித்தனர் உடனே ஔவைப்பிராட்டியார் தான் கருதியவண்ணம், விபூதி உருத்திராக்கம் காஷாயம் முதலிய சிவசின்னங்களைத் தரித்துத் திரிகரணசுத்தியோடு துறவுபூண்டு, இருமுதுகுரவர்மாட்டும் விடைபெற்றுப் பல சிவஸ்தலங்களையும் வணங்கவேண்டுமென்னும் ஆசைமீதூரப் பரதேச சஞ்சாரியாய், நிரந்தரம் நிலையாக வதிதலின்றி ஒழுகுங்காலத்திலே, "ஔவை குறள்'' ஞானக்குறள் என்றும் வழங்கும் ஓர் அரிய சித்தாந்தப்பிரபந்தத்தையியற்றியருளினர். அக்காலத்திற்றானே ஔவையார் ஓர் 'வரகவி' என்னும் கீர்த்தி மாதிரமெங்கும் பரவியது.

(தொடரும்.)

தேசாதிபதியின் தரிசனை.

தேசாதிபதியவர்கள் சென்ற 6-ந்தேதி யாழ்ப்பாணத்தைத் தரிசிக்க வந்து யாழ்ப்பாண ஸ்டேசனிலிறங்கினபோது வரவேற்புபசாரணை நடந்தவுடன் 3 உபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. முதலாவது ஏர்பன் டிஸ்திறிக் கவுன்சில் தலைவர் சௌரவஸ்ரீ. ஆ. கனகரத்தினம் அவர்களால் வாசிக்கப்பட்டது. நகர்ப்புறம் நல்ல தண்ணீர் உதவுதற்கோர் ஏற்பாடு அவசியம் என்றும், அதற்குரிய செலவைக் கவுன்சில் பொறுத்துக்கொள்ளச் சக்தியற்றதாயிருத்தலின் அரசினர் சகாயம் வேண்டுமென்றும் கேட்கப்பட்டது.

இரண்டாவதாக ஊரவர்கள் பேரால் சேர் இராமநாதன் அவர்கள் வாசித்தது வடமாகாணம் இலங்கையின் மறுபகுதிகளோடு சேராமல் வேறாகப் பிரிந்திருக்கின்றது. இதைத் தேசாதிபதி முதலானோர் இடைக்கிடை வந்து தங்கிப் போகத்தக்க வசதியுடையதாக்க அரசினர் கரிசனை காட்ட வேண்டும். இங்கு அதிகமாய்க் கிடக்கும் வெறுந்தரைகளைத் திருத்தி ஊரவர்களுக்குக் கொடுப்பதும் திருத்தப்பெற்று நீர்ப்பாய்ச்சல் வசதியற்றுக் கிடக்கும் பகுதிகளில் நீர்ப்பாய்ச்சல் தொடங்குவதற்கேற்ற ஒழுங்குகளை அமைப்பதும் அவசியம். வன்னி பூநகரி இரணைமடுப் பகுதிகளை அரசினர் சற்றுத் திருத்தியிருக்கின்றனர். அதற்காய் நாம் நன்றி கூறுகின்றோம். ஆயின் அது போதியதல்ல, கிருஷி சம்பந்தமாய் இன்னும் பல சகாயங்கள் வடமாகாணத்துக்குச் செய்யப்பட வேண்டும் என்னும் மனுக்கள் இப்பத்திரத்திலே குறிப்பிட்டிருந்தன.

மூன்றாவதாக தொழிலாளர் ஐக்கிய சங்கத்தின் தலைவராகிய ஸ்ரீ A. P. தம்பையாவால் வாசிக்கப்பெற்றது.

தேசாதிபதியவர்கள் பிரதான கல்லூரிகளையும் வைத்தியசாலைகளையும் அன்புடன் தரிசித்து மாணவர்க்குரிய புத்திமதிகளையுங் கூறினர். பின் காரைநகர் ஊர்காவற்றுறை நயினாதீவு இவைகளைத் தரிசித்தார். அவ்வேளையில் வாசிக்கப்பெற்ற உபசாரப் பத்திரத்தில் துறைமுகத்தை அடுத்த கடலைப் பாரிய கப்பல்களும் வந்து ஒதுங்கத் தக்கதாய் வெட்டி ஆழமாக்கல் காரைநகர்க்கும் ஊர்காவற்றுறைக்கு மிடையிலுள்ள வாய்க்காலைக் கடத்தற்குப் புகைவள்ளம் அல்லது மோட்டார்வள்ளம் இடல்வேண்டும். அராலி வேலணைப் பாலத்தை விரைவில் இடல்வேண்டுமென்னும் விஷயங்களில் மனுக்கள் குறிக்கப்பட்டிருந்தன. ஊர்காவற்றுறையிலே கூடிய தீவுப்பற்றுத் தலைமைக்காரரைத் தேசாதிபதியவர்கள் குறிப்பாக நீங்கள் குடிகளுக்கு பிதாக்களும் அரசுக்குக் காதுங் கண்ணுமாயிருங்களெனப் புத்தி புகட்டினர்.

12உ கரைச்சி கிளிநொச்சி இவைகளுக்கும் சென்று தேசாதிபதி தம் பரிவாரத்தோடு வவனியா வழியாய்க் கொழும்புக்குச் சென்றனர்.

குணமாமணி.

1-ம் அத்தியாயம்.

(முற்றொடர்)

சுப்பன் வீரன் என்னுமிருவரும் தங்கம்மாளை வண்டியிலேற்றிச் சென்றுகொண்டிருந்தார்களே. இவர்கள் நேராக முருகேசன் வீட்டுச் செல்லாது முன்னமே முருகேசனால் ஆயத்தஞ் செய்யப்பட்டிருந்த 144-ம் நம்பர் மாளிகையின் முன்புறத்தே வண்டியை நிறுத்தியதும் சுப்பன் தங்கம்மாளை வண்டியை விட்டுக் கீழே இறங்கி மாளிகையினுள்ளே போகும்படி சொல்ல தங்கம்மாளும் இசைந்து சென்றனள், அப்பொழுது மணி 5-30. நிற்க.

முருகேசனைப்பற்றிச் சொல்லவேண்டிய சிலவற்றைச் சொல்லிக்கொண்டு குணமாமணியின் வீட்டில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம்.

அதாவது நமது முருகேசனுக்கு சுமார் 48 வயசு இருக்கும்; நடுத்தர உயரம்; பருமை சமம்; அதிக நிறம் இல்லாதிருந்தாலும் பொதுநிறத்திற் குறையாது; முன்வாயில் பல்லொன்று இல்லை; காதில் ஒரு சோடி வயிரம் சொலிக்கின்றது; தகப்பன் காசிநாதர்; ஊருக்குள் அதிகந் தெரியாதிருந்தாலும் கமச்செய்கையை விடாது நடத்தி பொதுவாகச் சம்பாரித்திருந்தவர்; இறந்துவிட்டார்; தோட்ட நிலம், வயல் நிலம் இவைகளும் உண்டு; முருகேசனும் சற்றே செல்வமாக இருந்தவர்; காலகதியிற் கடனாளியாகிவிட்டார்; இதற்கிடையில் விவாகமும் இரண்டு முடிந்து இப்போது மூன்றுக்கு ஆயத்தமாக இருக்கிறது; கடன்காரர் வீட்டுக்கு வந்துவிடுகிறார்களோவென நினைந்து காலமே மறைந்துவிடுகிறது வழக்கம்; இன்று இன்னொரு சந்தோஷமேலீட்டினாற்போலும் விடிய 6 மணிக்கு நித்திரைவிட்டெழுந்து தந்தசுத்தி முதலியன முடித்துக்கொண்டு நேராக 144-ம்நம்பர் மாளிகைக்கே சென்றுகொண்டிருக்கின்றார் முருகேசன்.

யாழ்ப்பாணம் கறு. சி. நா. கடைக்கு 1000 ரூபாவும் 5 வருஷ வட்டியும் முருகேசம்பிள்ளை கொடுக்கவேண்டும். இதற்காய் விறாந்து தேடிவரும்பொழுது முருகேசனும் எதிர்ப்பட்டார். சேவகன் உமக்கு பிடிவிறாந்தொன்றிருக்கிறது; முருகேசம்பிள்ளைதானே உமது பெயர் எனக் கேட்டலும், முருகேசன் ஐயா, தயவுசெய்து இன்று என்னை மன்னியுங்கள்; உங்களுக்கு நல்ல வெகுமதி அளிப்பேன் என்று பேசுவதற்கிடையில் மேற்படி கடைக் கணக்கன் முத்துக்கருப்பன் அவ்விடம் வந்துவிட்டான். முருகேசனை கோட்டுக்கே சேவகன் கொண்டுசெல்கின்றான்.

(வரும்).

பொதுச் சமாசாரம்

காலநிலை.

சென்ற கிழமை மழை வருஷித்திருக்கிறது. வேளாண்மை சில இடங்களிற் செதுக்கப்பட்டிருந்தன பஞ்சம் வருமெனப் பலர் எதிர்பார்க்கின்றனர். பனிகாலமாயிருந்தும் குறைவாகவேயிருக்கின்றது.

யாழ்ப்பாணம் கள்ளுச் சங்கத்தாரின் முயற்சியால் கள்ளுவருமோவெனப் பார்த்திருந்த பலர் கள்ளு இனி யாழ்ப்பாணத்திற்குத் திரும்பவாராதெனக் கூறுகின்றனராம்.

கொழும்புத்துறைக் கிறித்தவ பள்ளிக்கூடத்தில் ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களைச் சேர்க்கப்படுகிறதில்லையாம். இப்பொழுது சுன்னாகம் கிறிஸ்த பையனொருவனைச் சேர்த்திருக்கின்றார்களாம். சேர்த்திருந்தால் மகாத்மாவின் போதனைகள் பரவிவிட்டதெனலாம்.

சென்றமாசம் கொட்டகப்புலம் கிறிஸ்தவக் கோயிலுக்கு ஒடுக்கப்பட்டசாதிக் கிறிதவனொருவன் சட்டையிட்டுக் குடைபிடித்துச் சென்றமையினால் அங்குள்ள கிறீஸ்தவர்களிற் சிலர் இதுமாதிரி வேஷத்துடன் இங்கு வருவது சரியல்லவென்றும் ஒடுக்கப்பட்ட இங்குள்ளாரும் இதுமாதிரிப் பழகவேண்டி வந்துவிடுமெனக் கூறினராம்.

பத்திரிகை வரவு.

இந்தியத் தாய். இது ஸ்ரீரங்கத்திலிருந்து வெளியாகும் தேசியத் தமிழ் மாதப்பத்திரிகை. தேசமுன்னேற்றத்துக்கான பல அரியகட்டுரைகளோடும் இன்னும் பொதுவான பல விஷயங்களோடும் வெளிவருகின்றது. ஆசிரியர் G சுப்பிரமணிய ஐயர். வேண்டுவோர் "பத்திராதிபர் இந்தியத் தாய் ஆபீஸ், ஸ்ரீரங்கம்" என்றெழுதவும். வருடம் 1-க்கு ரூபா 1.

கலிகால தீபம். இது காரைநகரிலிருந்து மாசமிருமுறை வெளிப்படுகின்றது. பல அரிய விஷயங்களும் பொது விஷயங்களும் வர்த்தமானங்களும் அடங்கியிருக்கின்றன. "பத்திராதிபர் மு. சபாரத்தின ஐயர் காரைநகர்" என்றெழுதவும். வருட சந்தா ரூ 2 50. மாசம் ஒருமுறை வெளிவந்த கலிகால தீபம் எம்பெருமான் கிருபையால் மாசம் இருமுறை வெளிவருகின்றது. இன்னும் மாசம் நான்குமுறை வெளிவரும்படி ஈசனைப் பிரார்த்திக்கின்றோம்.

சன்னியாசிகளின் சதி.

தற்காலத்தில் சன்னியாசக் கோலங் கொண்டிருக்கும் பலர், சீவியத்தைக் கழிக்க, வேறேதும் வழிவகையின்றி, "உதர நிமித்தம் வெகு கிருத வேடம்" என்றமாதிரி, எடுத்த கோலமென்பதை, பின்வரும் சம்பவங் காட்டும்.

ஒருநாட்காலையில் நாலுசன்னியாசிகள் சென்னபட்டணத்திற்கு அணித்தான கிராமமொன்றில் சீவித்த மகமாயி என்பவளிட மேகி, பதினெட்டு வருடங்களின் முன் சிங்கப்பூர் போய் அங்கே மரணமடைந்துவிட்டான் என்று சொல்லப்பட்ட அவள் புருடன், உள்ளபடி மரிக்கவில்லையென்றும், அப்புருஷன் இவன்தானென தங்களில் ஒருவனைச் சுட்டிக் காட்டவும், அறிவில்லா அவ்விதவை மெய்யென்று அங்கீகரித்தனள். அச்சனிபகவான் மைந்தரில் ஒருவன், அவள் புருடனை அவளுடன் விட்டுவிடலாம்; ஆயின், அவன் தங்கள் குருவுக்கு, ரூபா 50 கொடுத்தால்தான் அவனை விடலாம் எனவும், மகமாயியும் அவள் இனசனத்தாரும் யோசித்து, ஆம் ஐம்பது ரூபா கொடுக்கின்றோமெனப் பொருந்தி அவர்களுள் ஒருவனுடன் குருவிடங் கொடுத்து, பாதநமஸ்காரமுஞ் செய்தனர். மூன்று சனியும் போனபின், மற்றச் சனி, அவளுடன் பல கிழமைகளாகச் சீவித்தான். புருஷ பெண்சாதி இருவருங் கூடி, மதுரையிலுள்ள ஓர் கோவிலுக்கு விழாக் கொண்டாட்டமொன்றுக்குப் போயினர். சன்னியாசியாரான கணவனார், அவள் அணிந்திருந்த நகைகள் யாவையும் கைப்பற்றிக்கொண்டு அவளை யாத்திரத்தில்விட்டு மறைந்தனர் ஊரவரின் உதவியினால், இக்கள்ளன் கண்டுபிடிக்கப்பட்டு, அரசிடம் போனதும். அரசு மூன்றுவருடக் கடூழியச் சிறை விதித்திருக்கின்றது இத்தண்டனை இக்காவாலிக்குப் போதாது. —"குணநாதன்."

நாற்றிசை நோக்கு.

பருத்தித்துறையைப் புகையிரதத்தால் இணைத்தல்

யாழ்ப்பாணப் புகையிரத வீதியோடு பருத்தித்துறையைக் கிளைப் புகையிரத வீதியாலிணைக்கும்படி சேர் P. இராமநாதன் அவர்கள் தேசாதிபதிக்கு வாசித்த உபசாரப் பத்திரத்திலே ஓர் மனுக் குறித்திருந்தனர் தேசாதிபதியவர்கள் இவ்விஷயத்தைத் தாம் புகையிரத வீதிப்பகுதித் தலைவருக்குத் தெரிவித்துக் காரியத்தை நன்கு ஆராய்ந்து அறிக்கை செய்யும்படி கேட்கப் போவதாக அவ்வேளை உத்தரங் கூறினர்.

மல்லாகம் தச்சருக்குள் கொலை.

சென்றுபோன ஞாயிற்றுக்கிழமை இரவு 11—12—27 மல்லாகம் தச்சருக்குள் ஒரு கொலை நடந்ததாம் அம்பலவி கதிரேசு தன் குடும்ப சகலன் சங்கரியோடு குரோதங் கொண்டு கோடரியாற் கொத்திக் கொன்றுவிட்டனனாம். இருவருக்குமிடையில் நியாயம் பேசப்போன மாமியாருக்கும் அக்கோடரியாற் கொத்திவிட்டு ஓடிவிட்டனனாம் வாறான காயப்பட்ட மாமியார் யாழ்ப்பாண வைத்தியசாலையில் பரிகரிக்கப்படுகின்றனளாம்.

ஆதிதிராவிடன் இந்துக்களல்லவாம்

சென்ற கிழமை சென்னைக் ஹைகோர்ட்டில் ஆதிதிராவிடர் ஹிந்துக்களேயென்று விவாதத்தின் பின்னர் தீர்ப்புச் செய்தனராம். இந்துக்களென்றால் தேவாமிஷம் பொருந்தியவர்களோ இவர்கள் இந்துக்களல்லாது காட்டில் வாழும குரங்குகளென மதித்தனர்களோ இதற்கு ஒரு தீர்ப்பு கூட செய்தனராம் இவர்கள்தான் சுய அரசாட்சிக்காரர்கள். பின் சென்னை பச்சையப்பன் ஆங்கில வித்தியாசாலையில் ஆதிதிராவிடப் பிள்ளைகளைச் சேர்ந்திருக்கிறார்களாம்

ஓர் உத்தமியின் பதி பக்தி.

பாடலி புரத்திலுள்ள கிராமமொன்றில் 18, 19, பிராயமுள்ள பிராமண குலத்துப் பெண் மசானத்தில் தன் கணவனுடன் படுத்து உடன்கட்டை யேற விரும்பினள் தெய்வச் செயலால் தீதானே தோன்றிப் பற்றிக்கொண்டு பாதி எரிந்து போனாள். பின் வேதனை தாளாது கணவனது சவத்துடன் கங்கையில் விழுந்தாள். பொலிசார் நதியினின்றும் அப்பெண்ணைக் கரையேற்றி சிறையில் வைத்தனராயினும் அங்கு அவ்வுத்தமியின் ஆவி பிரிந்துவிட்டது எவரும் வற்புறுத்தாது நிகழ்ந்த சம்பவம் இது என்னே கற்பரசியின் மாண்பு

தேங்காய்க்குள் நண்டு.

பஸிபிக் மகா சமுத்திரத்தில் தென் கடல் தீவுகள் என சில தீவுகளிருக்கின்றன. அவைகளில் உலகில் பெரிய நண்டுகள் வசிக்கின்றனவாம். இவைகள் சாதாரணமாய்த் தேங்காய்களின் கண்களைப் பொத்தலாக்கி அவர்களின் வழியாய் உள்ளிருக்கும் இளநீரையும், தேங்காய் வழுக்கையையும் தன் நகங்களால் எடுத்துத் தின்றுவிடுமாம். தேங்காய்கள் முற்றினதாய் இருந்தால் அவைகளைத் தூக்கிப் பூமியில் அடித்துப் பிளந்து உள்ளிருப்பவைகளைத் தின்னுமாம்.

சீர்திருத்த விசாரணைக் கமிஷனர் யாழ்ப்பாணம்வந்து திரும்பிவிட்டார்கள்.

இலங்கை சீர்திருத்த விசாரணைக் கமிஷனர் சென்றவாரம் யாழ்ப்பாணம் வந்து இரு நாட்கள் தங்கியிருந்து யாழ்ப்பாணத் தமிழருள்ளே சனத்தலைவர்கள், சங்கஅதிபர்கள் முதலிய பிரதிநிதிகள் அரசியற்றிருத்த சம்பந்தமாகத் தம் அபிப்பிராயங்களை வெளியிட விருந்தாரையெல்லாம் விசாரணை செய்யலானார்கள். அவர்களுடைய விசாரணைகள் பாரபட்ச மற்றனவாய் பெரிய நீதியரசர்க் குரியனவா யிருந்தமையைக் கவனித்து வியந்துகொள்ளாதாரில்லை. இலங்கையார் சுயவரசு கேட்டுநிற்கு மிக்காலத்திலே எல்லாச்சாதியாரையும் நன்கு விசாரணைசெய்து அவர்கள் மத்தியிலே வேற்றுமைகள் மனவித்தியாசங்கள் பிணக்குகள் இருப்பின் அவைகளையெல்லாம் நிவிர்த்தியாகக்கூடிய வழிவகைகளைக் கண்டறிந்து எல்லாரும் உவக்க, எல்லாரும் அரசியற் சுதந்தரமும் சுயாதீனமும் அடையத்தக்கவிதமாய் அரசியற் றிருத்தஞ் செய்வது ஆங்கில அரசின்மேற் பொறுத்த கடனாகும் ஆயின் தற்போது கமிஷனர்களது விசாரணையிலே அவர்கள் அறிந்தும் அறியாதிருந்த நியாயங்களெல்லாம் பட்டப்பகல்போல் வெளியாயின. இந்த விசாரணையிலே அவரவர் தத்தமக்குள்ள குறை முறைகளை கஷ்ட நஷ்டங்களை போதியவொப்பினைகளுடன் எடுத்துக் கூறினார்கள்.

இலங்கைச் சட்டநிருபண சபையும் தமிழ்ப்பிரதிநிதிகளும்.

இலங்கைச் சட்டநிருபணசபையில் தற்போதிருக்குமொழுங்குப்படி சனப்பிரதிநிதிகளுக்குச் சம்பளமும் வேறு செலவுகளும் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது இப்போது சட்டநிருபண சபை அங்கத்தவரின் சிற்றுண்டிக்குச் செலவாகும் தொகைமாத்திரமே வருடவீதம் 15 000 ரூபாவுக்கு மேற்படுகின்றதாம். இப்படியிருக்கும்போது சட்டசபை அங்கத்தவரை இன்னும் கூட்டிவிட்டால் அவர்களுடைய செலவுக்கும் மிகப் பெரிய தொகை வேண்டியதாய்வருமாம். இதனைக் கண்டாக்கும் "எல்லாரும் பொன்பூண என்மகனோ பார்த்திருக்க" என நினைந்து ஒவ்வொரு கிராமத்தவரும் ஒவ்வொரு சாதியத்தவரும் எமக்குமோர் பிரதிநிதி வேண்டுமென்று கன்னங்கட்டிநின்று அங்கத்தவர்தொகையை அதிகரிப்பித்துவிட்டால் அவசியமின்றி அரசியல் வருமானத்தில் ஓர் பெருந்தொகைப்பணம் செலவாவதுமன்றிக் கருமங்களும் இலகுவில் முடியமாட்டா. ஆதலால் பிரதிநிதிகள் ஏற்படுத்தப்படவேண்டுமென வாதாடுவோர் இவ்விஷயத்தையும் சிந்திப்பாராக.

இனாம்! இனாம்!!

டேபில்டைம்பீஸ் இனாம்.

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைகடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேசையின் பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருடம் உத்திரவாதம். முந்துங்கள் விலை ரூ 7-8-0 வி. பி. சட்டமில்லாத வெளிநாடு நேயர்கள் இதற்கு ரூபா 8-8-0, முற்பணம் அனுப்பவேண்டும்.

(F 357.) ஹார்டி அண்டு கம்பனி,
தவால்பெட்டி 1272, மதராஸ்.

டிடக்டாஸ்.

அல்லது துப்பு (ரகசியம்)
அறியுங் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும், செய்யுங்காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன் மூலமாய்ப்பார்க்கலாம். உம்முடைய பின்னும் முன்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாய்க் கண்டுகொள்ளலாம். உமக்குத்தெரியாமல் உம்மைப் பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப் பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக் கொள்ளலாம். இன்னும் பலவித ரகசியங்களை இதன் மூலமாய் ஒருவருந் தெரிந்துகொள்ளாமற் கண்டுபிடிக்கலாம். இத்துடன் பல கலர்களால் தயாரித்த படுக்கையறையின் 4 அழகிய போடோ படங்களுடன் மேற்படி கருவி ரூ. 2-0-0 மலாய்நாடுகளுக்கு முற்பணம் வந்தாலன்றி கண்டிப்பாய் வீ. பீ. யில் அனுப்பமுடியாது.

பிரிமியர் நாவல்டி ஸ்டோர்ஸ்,
ஜார்ஜ் டவுன் மதராஸ்.

நூதனமான ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதைமேசையின்பேரிலும், சுவரிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதிற் கண்ட கயிற்றின் Wire உதவியால் நிறுத்தவுஞ் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக்கொண்டு போகக் கூடியது. விசேஷகாலங்களில் வைத்தால் திரளான சனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாகப் பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4-8-0.

தபாற் செலவு 0-8-0.

ஹார்டி அண்டு கம்பனி,
தபால் பெட்டி 1272, மதராஸ்.

இளைஞர்களுக்கு மாத்திரம்

அழகே உருவமாகக் கொண்ட இயற்கையான சரீர சுபாவத்தின் அமைப்பையும் அங்கஸ்திதிகளையும் உடைய பாரிஸ், ஜர்மன், இங்கிலிஷ் இந்திய படங்களடங்கிய 22 படங்கள் கொண்ட ஆல்பம் 1-க்கு விலை ரூபா 3-0-0

பிரிமியர் நாவல்டிஸ்டோர்ஸ்,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்து முக்கோடி மக்களுள் (தற்காலம்) உயர்வாகிய அறிவொழுக்கம், தாழ்மை, நீதி முதலியவற்றுள், மேம்பாடடைந்து சித்தாதி உலகமெங்கணும் வியாபித்து விழங்கும் இந்திய மாதாவின் (ஏக) அருந்தவப் புதல்வனாக அவதரித்த மகாத்மா இருஷி காந்தி அடிகளும், நம் தமிழ் நாடாகிய யாழ்ப்பாண நாட்டைத் தரிசித்தபோது கூறிப் போந்தவைகளுள், விஷேஷித்தவை தீண்டாமையும் மது விலக்குமே யென்பதை யேவர்களேவரு மறிவர். இவ்விரண்டுமே நம் நாட்டிற் றற்பொழுது நிகழும் அமைதியின்மையாகிய சமூக ஒற்றுமைக் குறைவை வளர்த்துக் கொண்டே வருவது நாட்டின் உயர்ச்சிக்குப் பங்கம் வருவிப்பவை யென்பதை அறிவுடையோரெவரும் ஒத்துக்கொள்வ ராகையால் தேசாபிமானமே மக்கட் பிறப்பின் உயர்வென முடிக்கின்றேம்.

கொலையும் புலையும் குடியும் விடுமின்!

மரக்கறி யுணவைக் கொள்ளுங்கள்!
மாமிசம் நோயெனத் தள்ளுங்கள்!

பூமிதேவி எத்தனை காய் கனி, தானியங்களைத் தருகிறாள்! இவையே மனிதன் புசிக்கும் புசிக்கத்தக்க வுணவு! இரக்கமும் அன்பும், என்பிருமின்றி நமது ஊமைச் சகோதரரான ஆடு, கோழிகளை அறுத்துண்ணுதல் மனிதத் தன்மையாமோ! அன்பீர், நாம் புலியல்ல, உங்கள் பல்லையும் நகங்களையும் பாருங்கள்! நமது உடலின் அமைப்பை நோக்குங்கள்! தாவரவுணவே நமது உணவென்பதைத் தெளியுங்கள்! உங்கள் வயிறு பிறவுயிர்களுக்குச் சுடுகாடா? நீங்கள் வாயில்லா வுயிர்களுக்கு யமனா? இல்லை. எல்லாமதங்களும் சொல்லுவதைக் கேளுங்கள்.

அஹிம்ஸையே மேலான தர்மம். பஞ்சமா பாதகத்திற்கு அடிப்படையான கொலையைச் செய்ய உங்கள் மனச்சாட்சி சம்மதிக்கிறதா, அன்பும் இரக்கமுமே மனிதர் குணம்.

வாயில்லா வுயிர்களை அம்மா, அம்மா என்று அலற அலறக் கழுத்தறுத்து உண்டு இந்த நாற்றவுடலைப் பெருக்கவைத்தல் நன்றல்ல. உணவே குணமாக மாறுகிறது. மரக்கறி புண்ணும் குரங்கும், யானையும், பசுவும், காளையும்! குதிரையும் எவ்வளவு உறுதியாயும் சுறுசுறுப்பாயும் இருக்கின்றன! புலால், கள், முட்டை, மீன் முதலியவற்றை உண்பவன் தன் புலன்களை அடக்க முடியாதவனாகிறான். பேராசை, பொறாமை, மதம், செருக்கு, சினம், முரட்டுத்தனம் முதலிய தீய குணங்கள் மாமிசத்தினால் வளருகின்றன. மாமிசம் உண்பதை அனைவரும் தவிர்த்தால் உலகில் இவ்வளவு நரவதைகளான போர்களும், சாதி சமயச் சண்டைகளும் இரா. சாத்விகமான தாவரவுணவால், ஊக்கமும், ஒளியும், அறிவும், ஆற்றலும், அன்பும், அருளும், பொறுமையும் எல்லா நலன்களும் பெருகும் புலை தவிர்த்தால் மனிதர் பகை தவிர்த்து, சாந்தமாகி, ஒற்றுமைப்படுவர்! நாற்றப் பிணங்களை புண்ணல் நலமல்ல. பிணியும், தீயகுணமுமே அதனால் வருவது. தொத்து நோய்கள் மாமிசம் உண்பவரை எளிதில் பற்றுகின்றன

நம்மைப்போலவே ஐயறிவுயிர்களான ஆடு கோழிகளை உயிர்போக்கிப் பிணமாக்கி யுண்பவர் [illegible] அவர்கள் பிறவுயிர்களின் எமன். அவர்களுக்கு விலக்குத்தன்மையே அதிகரிக்கும் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

கொல்லாமையே அறவினை! கொல்லாதவரே நல்லோர்! கொல்லாமையே தவம்! தன்னுயிர் சுத்தம் பிறவுயிர் காப்பது மனிதர் கடன்! தன்னுடல் பெருகப் பிறவுடலுண்பவன் அருளற்றவன். அருளில்லாதவருக்கு ஒரு சுகமுமில்லை அன்பீர்; நீங்கள் மரக்கறிகளையே உண்டு, புலாலை மறந்தால் சுவர்க்கம் உங்கள் எதிரிலிருக்கும்? தேவியின்பெயரால் ஆடு கோழிகளை அறுக்கும் பலிகொலையும் இராது. கோடி உயிர்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தவர்களாவீர்கள்! உயிர்களெல்லாம் உங்களைத் தொழுது வாழ்த்தும்! மாமிசவுணவை நீத்து, கொலைவிடுத்து, குடிமறந்து, இச்சேமது ஜீவரக்ஷா பிரசாரசபையில் மாதம் ¼-ரூபாய் செலுத்தி அங்கத்தினராகச் சேருங்கள். கொலை மறுத்தலுக்காக எங்கள் சபையாருடன் நீங்களும் சேர்ந்து பாடுபடுங்கள்! உங்கள் சனபவையும் கொல்லா விரதிகளாக்குங்கள்!

உங்களுக்கு எல்லாநலமும் உண்டாவதாக.

[சென்னை தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரசபையார் வெளியீடு] கோவைமகாரி.

சாதித்தாயின் சிலம்பொலி.

சனசமூகங்களைக் குறுக்கிட்டு எல்லாநாட்டிலும் பேலிவருவதாகிய இச்சாதியை ஆராய்தல் சாதிவாய்ப்பட்டோர் கடனாதலாலும் இன்றைக் காலத்தில் சாதிகள் பலவித எண்ணங்களால் மாறுதலாகக் கொள்ளப் படுதலினாலும் சாதியமைப்பை யுணர்தல் அரிதாய் கடனாதலாலும் "சாதித்தாயின் திருவடியை" வழுத்தி நுணுகி யாராய்வோமாக.

இச்சாதியானது பலநூற்றாண்டுகட்கு முன்னே அபரிமிதமான செல்வாக்கை யுடையதாய் சனசமூகங்கள்மீது அடர்ந்து படர்ந்து விளங்கியது.

உழவினர்கள் நிலப்பரப்பைப் பதந்து அதற்கமைந்த பல வரம்புகளினால் நிலப்பரப்பை பல பகுதி பகுதிகளாகக் குறுக்கி ஏற்ற தானியங்களிட்டு நீர்ப்பாய்ச்சினாலே யன்றி நிலப்பரப்பை ஒரேபடித்தாய் வகுத்து வேண்டுவனவாகிய பலவித தானியங்களைத் தூவி அத்தானியங்கள் உய்தற்பொருட்டு ஊர் போன்று வேண்டற்பாலதாகிய நீரைப் பாய்ச்சி அந்நிலப்பரப்பு முழுதுஞ் செழியச் செய்வது எங்ஙனம்.

சனசமூகங்களாகிய நிலப்பரப்பைச் சாதியாகிய வரம்பு பலவித உருவங்களாகத் தோன்றிச் சனசமூகத்தை பல பிரிவுகளாக வகுத்து ஆங்காங்கு வேண்டுவனவான தன்மையாய் இடத்திற்கேற்றவாறு அமைந்து விளங்குகின்றது.

வரம்பானது மண்ணினு லாக்கப்பட்டது உருவங்களில் பற்பலவிதமாய்ச் சிதறி விளங்குவது போலவே

சனசமூகங்கள் நோய்யாது இயங்குதற் பொருட்டு சாதியானது பலவித உருவங்கள்கொண்டு ஆங்காங்கு நிறுவி சனப்பொறுப்பைச் சுமந்து செல்கின்றது.

மக்களுடம்பி லுறுப்புக்களில் எவை சிறந்தவை? ஒவ்வொரு உறுப்பும் தேகஅமைப்புக்கு இன்றியமையாத் துணைக்கருவிகள். இதில் ஒன்றைத் தலையாகக் கூறுவதும் மற்றொன்று தந்தப்புரிதலாலும் உதவிபுரிந்த அதற்கு மற்றொன் றுதவி புரிதலாலும் இப்படியே ஒவ்வோர் கருவிகட்கும் ஆதாரமாய் சங்கிலிக் கோர்வையைப் போன்று மற்றோர் கருவி யமைந்து விளங்குவதால் இவைகளிற் சிறந்தவை எவை?

அவ்வுறுப்புக்களில் ஓர் சிறிய உறுப்புத்தானும் தேசத்தி லமையாவிடின் தேகம் நிலைகுலைந்து தோன்றுதலால் உறுப்புக்கள் யாவும் சமத்துவமுடையனவே.

மக்களின் உடம்புபோலவே சமூகமும் உறுப்புக்கள்போன்றே சாதிகளுமாய் சாதியானது பற்பல உருவாக மாறி சனசமூகத்தைக் குறுக்கிட்டு பொலிந்து விளங்குகின்றது.

உடம்புக்கு உறுப்புக்கள் எப்படி இன்றியமையாதனவோ அங்ஙனேபோன்றே சாதிகளும் சமூக உடம்புக்கு இன்றியமையா. அன்றியும்,

சுவை யொளி ஊறு ஓசை நாற்றம் என்னும் மிவ்வைம்புலன்களையு மறிதரும் மனதை ஏனைய நான்கு புலன்களையும் ஒழுத்து ஓர் புலனில் நிறுத்துவனே பாகில் அப்புலனுலகும் வினை எத்துணைச் சிறப்போடு பெறப்படும் அன்றியும்; வலிமையும் விசாலித்த நோக்கமும் நற்றிருத்தங்களும் அக்கிரிசையின்மீது படரும். இதற்குக் காரணம் யாது? பலவழி யோடாது ஓர்வழி நின்றமையே

உதாரணமாக: தட்டானை யெடுத்துக்கொள்வோம். ஆபரணங்களைச் செய்பவனைத் தட்டானென்னும் வகுப்புப் பற்றிக்கொள்கின்றது. அவ்வகுப்பு அணையால் அத்தொழில் விரிந்து அவனிடத்தில் பொலிந்து மலிகின்றது.

தட்டானின் வேலைத்தலத்தில் சென்று அவனின் நுட்ப கிரியையின் நுணுக்கத்தைக் கவனிப்போம். என்னை! நுட்பம்!! அதனை வேறேது வகுப்புடையான் பயில எவ்வளவு காலம் வேண்டும். தட்டார அவ்வகுப்பிற் பிறந்த வோருவன் பயில எவ்வளவு காலம் வேண்டும்.

ஊன்றிநோக்கில், தட்டான் தன் தொழிலைப் பயிலாவிடினும் அவனது வகுப்பு அவனைப் பயிற்றுமென்றோ? வகுப்பின் மாட்சி என்னை!

வகுப்பின் ஒழுங்கு இல்லாவிடின் மக்கள் பல துறைகளிலு மிறங்கி தங்களொழுக்கத்தையும் உணர்ச்சியையும் பல வழிகட்கும் பகிர்ந்து வெறுவிலிகளாய்த் தவிப்பர்களன்றே. வகுப்பின் சுவரானது வகுப்பிற் றட்டாரை மாட்சிபொருந்திய ஆட்சியாய் ஆழகின்றது. வகுப்பின் ஆட்சியின் மாட்சி என்னே?

அந்தோ! பரிதாபம்!! தற்காலக் கண்ணுடியனெதிரே சாதியானது தற்காலத்துக் கோனப்பபடும் எளிமைதங்கிய நிலைபோல் தோன்றுகிறதுபோலும்.

இனி இதை இவ்வாறு நிறுத்திச் சாதியினவழியே சென்று ஆராய்வோம். அசுத்தேசாதியானது நான்காய் பிளக்கப்பட்டு பிராமண - சத்திரிய - வைசிய - சூத்திர என்னும் நான்கு பெயர்களைப் புனைந்து (அசுக்கண்ணினெதிரே) பிரகாசிக்கின்றது.

இதில் பிராமணனின் இலக்கண மென்னை: "பிரம்ம ஞானி பிராமணன்" என்னும் வாக்கியத்தின் கிசைய பிரமஞானம் எவனுக்குண்டோ அவனே பிராமணன் ஆவன். அத்தகையோன் உலகத்தி னாசாடியும் ஊசாடாமல் உலக இயல்புக்கு ஏற்றவாறு தன்னைப்பட்டு உலகினரைப் பேபோப்பவனாவான். இவனே பிராமண சாதி விலத்து.

சத்திரியன் இலக்கணமென்னை: உடம்பிலமைந்துள்ள சக்தவுடனோடு சமர்புரிந்து வெற்றிகொண்டு தன்னுள்ளாளிக்கும் தத்துவங்கள் யாவற்றையும் எவன் நடத்துகின்றனனோ அவனேயே சத்திரியசாதி தாங்கிக்கொள்ளுகின்றது.

வைசியனின் இலக்கண மென்னை: பொருட்களைக் கொள்ளலும் விற்றலுமேயன்றித் தனக்கெனக் கருதாவாறுபோல் (உலகத்தின்கண்) நம்மெதிரே தோன்றும் பிரபஞ்ச வியாபாரசாலையிலே கொள்ளலும் விற்றலும் போக்கே யாவும் வருதலும் வந்தவாறே போதலும் தன்னியல்பாதலால் அதில் மயங்காது "திடமான அறிவுறுவு" நின்று அவைகள் தம்மைப் பற்றவும் தாம் அதைப் பற்றாது நிற்கும் நிலையனும் எவன் உளனோ அவனே வைசிய சாதியின் வடிவமாவான்.

சூத்திரனின் இலக்கண மென்னை: சூத்திரமானது தன்வயமின்றி இயங்குந் தன்மையைப் போல் சூத்திரனுந் தனது உண்மை நிலையையும் அவனின் விசாலித்த சுதந்தரத்தையும் உணராது "எதார்த்த பீடத்தினின்றுந் தழுவி" யந்திரங்கள்போன்று தேகமென வுணர்ந்து தானும் (உலகமும் உலக காட்சிப்பொருளாதி மூன்றும்) அழிகளினின்றும் எழும் அலைகளினால் மோதுண்டு தன்வயமற்று அவ்வலைகள் தன்னைத் தளைப்படுத்த வனவனே அவனையே சூத்திரசாதியானது முற்றுகையிடுகின்றது.

சாதியி னகப்புறமானது இவ்வாறு பிரகாசிப்ப, அந்தோ(சிலர்) ஒருசாரார் இற்றைக்காலத்து நூதன (நுணுக்க)நுண்ணிய வறிவாளிகளென மேலெழும்பி "சாதியை — வியாதி" போன்று நுணுகி அதில் ஒருகூற்றைப் பெரிதாயும், மறுகூற்றைச் சமனாயும், மறுகூற்றைச் சிறிதாயும், மறுகூற்றை எளிதாயுந் தம் கருத்திற் கொண்டு (விகுது) உலாவுகின்றார்கள். அந்தோ பேதமை.

இன்னோர்சாரார் சுதந்திரம் வேண்டும் சமத்துவம் வேண்டும் என்று கூச்சலிடுகின்றார்கள். என்னை!

ஓ கூச்சலே! சுதந்தரம் உனக்குக் கொடுப்பவர் எவர்? எவரிடத்து சுதந்தரமுண்டு? சுதந்தரமென்பதென்னை? சற்று நுணுகி ஆராய்வாயாக.

சுதந்தரமானது உன்னிடத்திலேயே மழுங்கிக் கிடக்கின்றது. சுதந்தரத்தை நீயே உனக்குக் கொடு சுதந்தரமெனில் உன்னை நீ ஆண்டுகொள்வதே உனது சமத்துவத்தை நீயே பறிகொடுக்கிறாய் உன்னை நீ மறந்து ஏன் புறத்தே திரிகின்றாய். உன்னிடத்திலேயே நீ சமத்துவத்தைப் பெற்றுக்கொண்டு உலகைத் திரும்பிப்பார். உன் சமத்துவம் உலகம் முழுதும் பரவி உன்னை வரவேற்கும்.

உதாரணமாக: சமூகங்களின் உயர்வு தாழ்வுகளைச் சற்று ஆராய்வோம்.

பிராமணச்சாதியானது சில ஆண்டுகட்கு முன்னே ஏகசக்கரவர்த்தியாய் ஏனைய சாதிப்பிரிவுகளையெல்லாம் தனது ஆணைக்குள் அமிழ்த்தி அலைகளின்மீது ஏறித் தனது "அபதந்திரக்காலை"த் தூக்கி நடனமாடி விளங்கியது.

அத்தகைய பிராமணச்சாதி இற்றைக்காலத்தில் முதிர்ந்து முன்பெற்ற மாட்சிதங்கிய பெயரையும் பறிகொடுத்து இப்பொழுது "பார்ப்பான்..." என்னும் பெயரால் கட்டுப்பட்டு ஊநூராய் நெலிகின்றதன்றோ? இதற்குக் காரணமென்னை … …சாதியன்று……சாதித்துட்பட்ட சமூகத்தாரே

பார்ப்பனரின் நூதனவாழ்க்கையால் 'பிராமணசாதியே' அப்பெரும் இழிவைச் சுமக்கின்றது ஆனதுபற்றி சமூகத்தார் செய்யும் நற்செய்கை துர்ச்செய்கைக்கேற்றவாறு அவர்களை அணைத்துக்கொண் டிலங்கும் சாதியும் நற்சாதி துர்ச்சாதியாகக் கவனிக்கப்படும்.

நம் நாட்டில் சிலர் ஒடுக்கப்பட்டாரென்று, தங்களுக்குத் தாங்களே ஒடுங்குவதால் உலகியல் ஏற்றங்கட்கெல்லாம் ஒடுங்குகின்றார்கள். என்னே! மக்களின் வாழ்க்கையின் மயக்கம்.

இப்படி அவன் ஒடுங்குவதாலேயே தாழ்வடைகின்றான். அன்றியும் அவனைப்பற்றிய சாதி(க்)கே..யே அப்பெருமிழிவு அடையப் பெற்று (அச்சாதியும்) அங்ஙனே இலங்குவதாயிற்று இத்தகைய மயக்கங்களினாலேயே நம் நாடு பெரிதும் நிலைகுலைகின்றது

ஓ சாதித்தெய்வமே! உன்னை ஓர்பகுதி பெரிதென்றும், மறுபகுதி சிறிதென்றும், மறுபகுதி இழிவென்றும், மறுபகுதி தாழ்வென்றும் இவ்வகையாக (உன்னைப்) பகிர்கின்றார்களே.

ஆ சாதித்தாயே! இவர்கள் சாதியில் மிகச் சிக்குண்டு தம் நாட்டையும் பாழாக்கி மக்களிடத் தரும்பும் அன்புக்கும் அபாயமைத்து, உலகின்கண் பிறந்தும் பிறப்பின் "பேறடையாது" மாக்கள்வகுப்பின் என்புக்கூடுகளாய் உலகின்கண் ஊருகின்றார்கள்.

தன்னிடத்தில் தங்கியிருக்கும் சுதந்தரத்தைத் தாமுணராது கண்ணற்றவர்களாய்க் காலங் கழிக்கின்றார்களே

முன்னூறாயிரவாறு பிராமணர்களில் பிறப்பொழுக்கங் குன்றிய பார்ப்பனன் ஒருவனை உலகு எத்துணைத்தலையனுக் கருகின்றது

எழிபவனைக் கருதுமோருவன் மக்களொழுக்கத் துயர்வானுமின், உலகில் மதிப்போடு மலருகின்றனென்பது வெளிப்படை. இத்தகைய ஆபாசவாழ்க்கையே சாதியடிகளைக் கறைப்படச்செய்தது. அவருடைய வாழ்க்கையை நோக்கின்—சமஅன்பின் பெருக்கை யுணரலாம்--அவ்அன்பாறு பெருகிய வற்றுக்குக் காரணம் என்னை? சகோதரத்துவமன்றோ……அத்தகையாரிடத்து வேற்றுமை பாராட்டுவாரோ?

இதுகாரணமாக! தங்கள்தங்கள் நிலைமட்டே தங்கள் சாதியுமொளிவிடும்.

சகோதரனே! உன்னை உன் சாதி கட்டுப்படுத்தவில்லை உன் சாதியை நீயே கட்டுப்படுத்தி இழிவுறுத்துகின்றாய் உன்மீது நீயே பரிதாபங்கொள நீயே உனக்குச் சுதந்தரத்தைக் கொடுத்து உன்னிடத்திலேயே சமத்துவத்தைப் பெற்றுக்கொண்டு உலகியல் சமத்துவ மடைவீராக. நீ உன்னிடத்தில் சமத்துவமடைதலும் உலகம் சமத்துவமாகவே வருகவென் றுன்னை மலிட்டழைக்கும். உன்னை நீயே தாழ்த்துகின்றாய்; உன்னிடத்திலிருந்தே உன்னை உலகம் மதிக்கிறது. சாதி பேலமற்றது; சமூகத்தைபண்டியே அது பிரகாசிக்கின்றது

உதாரணமாக: ஓர் வேளாளனை எடுத்துக்கோள். அவன் பஞ்சமவகுப்பிலே சென்று மணஞ்செய்யின் அவன் எச்சாதியாவன். பஞ்சமசாதியானெனின் அவன் ஒப்புக்கொள்வானோ? அவன் வேளாளனெனின் வேளாளதலத்தார ஒப்புக்கொள்வார்களோ? அவனின் சாதியாகிய வேளாளசாதி அப்பொழுது எங்கே போய் மறைந்தது

இதன் பயனாக சாதியானது மக்கள் நிலைமையி னியல்பாய் மதிப்படைகின்றது என் சகோதரனே! நீ பிறந்த சாதியின் இற்றைக்கால நூதன கட்டுப்பாடுகளை அறுத்து வெளியே கிளம்பி உலகி(யலி)ன் மேடையிலே யுலாவு நீ மக்கள் வகுப்பிற் பிறந்த மகனென நம்பு நீ உயர்ந்தவனுமன்று; தாழ்ந்தவனுமன்று. உன் வாழ்க்கையின் இயல்புக்கேற்றவாறு மதிப்படையுந்தகையன் நீ ஒடுக்கப்பட்டவனென் றொடுங்குவதாலே யாவற்றுக்கு மொடுங்கியவனுகி மிருகசுபாவத்திற் றுறவு கின்றாய் உன்னுலகத்துக்கு நீ பெருங்கேடு செய்கிறாய். இறுதியில் சாதித்தெய்வமுமுன்னை சபிக்கின்றாள் இத்தகைய முடியேற்றினின்றுந் தப்பிக்கோள்; உனக்கு வேண்டிய யாவற்றையும் முதல் உன்னிடத்திலேயே பெற்று உலகைத் திரும்பிப்பார். உலகும் உனக்கசையத் தோன்றும்.

இதில் மனஉறுதியை இளவாதே இயற்கை வாழ்க்கையாய் உண்மைஅன்பால் பிணிக்கப்பட்ட சீவியத்தில் தனக்கென்பதற்றுப் பிறர்க்கென வாழுதி. அதுவே எம்மை தெய்வப் பிறப்பிலேற்றும் சத்தியம்.

சாதித்தெய்வத்தி னுருவத்தி லிஃதோர் உறுப்புப்போன்று வரையப்பட்டு சாதித்தாயின் மாட்சித் திறவுகோலாய் இக்கட்டுரையானது நம் சாதித்தாயின் இயற்கைப் பரிசுத்தப் பிரகாசத்துக்கு நம்மனோரை வழிவமோறு வேண்டி முடிவுறுகின்றது.

சாதிமாதாவின் திருவருள் தழைக்க.

எஸ். கே. லோட்டன் அன்டு கோ.

பறங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் க. லோட்டன் காலம்தொடங்கி, நாங்கள் புகைப் படம் எடுத்து வருகிறோம் உங்களுக்கு உங்களைப்போல காண விருப்பமிருந்தாலும் அல்லது மற்றும் பட்சமுள்ளவர்களை நேரிற் காண விருப்பமிருந்தாலும் செய்வதென்ன?

எங்களுக்கு ஓர் கார்ட்டு எழுதி அறிந்து கொள்ளவும்.

மானேஜர்,
S. K லோட்டன் & Co.

விசேஷ அறிவிப்பு.

பியானோ, லில்லிபுளூட், பிடில், ஆர்மோனியம், கிரமபோன முதலிய சகல வாத்தியங்களும், கடிகாரங்களும் திருத்திக் கொடுக்கப்படும். மேற்கூறிய கருவிகளுக்கும் தேவையான எந்தச் சாமான்களும் விலைக்கும் பெறுக்கொள்ளலாம்.

கே. எஸ். இரத்தினம்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

ஓரியன்டல் ஸ்டோர்ஸ்.

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இதர வியாபாரங்களுடன் பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிற்கு வேண்டிய கதிரைகள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிஸ்கள பொதுவாக வீட்டிற்கு வேண்டிய எல்லாவித மரச்சாமான்களும், எங்களுடைய மாதிரிகளைக்கொண்டு திறமான தச்சர்களால் கொழும்பில் செய்வித்து யாவரும் விரும்பும் படியாயும் யாவரும் வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றோம்.

ஒருதரம் வந்துபாருங்கள்.

வ. அ துரையப்பா,
Proprietor.

யாழ்ப்பாணம் அப்போதிக்கரீஸ்.

(பொன்னுச்சாமி ஷாப்)
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டணத்திற்கு சாமான் வாங்கவந்தால், பிற கடைகளின் விலைகளை அறிந்திருந்தாலும் எங்கள் ஷாப்பின் விலைகளையும் சாமான்களையும் ஒத்துப்பார்த்து வாங்கவும்.

பலவிதமான வேஷ்டிகள சால்வைகள் ஷர்ட் சிலைகள் மற்றுமுள்ள எல்லாச் சாப்பு சாமான்களும் நேரும், பிரத்தியேகமான ஏஜண்டுகள மூலமாகவும் வரவழைத்து விற்கிறோம்.

டாக்தத்தர்களால் குறிக்கப்பட்ட எல்லா விதமருந்துவகைகளும், எங்கள்மருந்துச்சாப்பு பிரிவில், நற்சாட்சிப் பத்திரம் பெற்ற ஆட்களைக்கொண்டு, விலை சாசமாயும், கவைக்கமின்றியும், தயாரித்துக் கொடுக்கப்படும் எல்லா பேட்டன்ட்மருந்துகளும்கிடைக்கும்.

Dr. S Ponnusamy,
Proprietor & Manager.

Printed by V. M. Kandiah for and on behalf of the Jaffna Depressed Classes Association Chunnagam & published at the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna.

Printed. V.M. Kandiah
Saiva prakasa press.
Vannarpon